செய்தி வெளியீடு:37/ஜனவரி நாள்: 25-01-2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு பொது இ-சேவை மையங்கள் மூலமாக மின்கட்டணம் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
## இச்சேவையினைப் பொதுமக்கள் முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் அரசு இ-சேவை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. இம்மையங்கள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் இதர அரசு விடுமுறை நாட்கள் தவிர பிற நாட்களில் காலை 9.45 மணி முதல் மாலை 5.45 மணி வரை செயல்படும். பொதுமக்கள் இம்மையங்களுக்கு நேரில் சென்று அரசின் சேவைகளைப் பெறலாம்.

அரசு இ-சேவை மையங்களில் தற்போது, கூடுதலாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை செலுத்தும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள், தங்களது மின்கட்டணத்தை ரொக்கமாக அரசு இ-சேவை மையங்கள் மூலம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மின் கட்டணம் செலுத்தும் வசதி பிரதி தினம் காலை 9.45 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை மட்டுமே செலுத்த முடியும்.

மின்கட்டணத் தொகை ரூ.1-லிருந்து ரூ.1,000/-க்குள் இருந்தால் அதற்கான சேவைக்கட்டணம் ரூ.10/- ஆகவும், மின் கட்டணத் தொகை ரூ.1,001-லிருந்து ரூ.3,000/-க்குள் இருந்தால் அதற்கான சேவைக்கட்டணம் ரூ.20/- ஆகவும், மின் கட்டணத் தொகை ரூ.3,001/- லிருந்து ரூ.5,000/-க்குள் இருந்தால் அதற்கான சேவைக்கட்டணம் ரூ.30/- ஆகவும், மின் கட்டணத் தொகை ரூ.5,001-லிருந்து ரூ.10,000/-க்குள் இருந்தால் அதற்கான சேவைக்கட்டணம் ரூ.40/-ஆகவும், மின் கட்டணத் தொகை ரூ.10,000/-க்கு மேல் இருந்தால் அதற்கான சேவைக்கட்டணம் ரூ.50/-ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், மின்கட்டணத் தொகையுடன் வரையறுக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணத்தைத் தவிர கூடுதலாக கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**